# கவிமணி இன்பத்தமிழ் - XII
## மாதிரி வினாத்தாள் - 1
### மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

1. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்துகளும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

2. பொருத்துக.
அ. குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ. விலங்குகள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ. பறவைகள் – 3. குளிரால் நடுங்கின
ஈ. பசுக்கள் – 4. மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

3. “எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே” என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது ______.
அ) தனிக்குடும்பமுறை ஆ) விரிந்த குடும்பமுறை
இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

4. சுரதா நடத்திய கவிதை இதழ் ______.
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5. சென்னை, வெறும் நகரம் மட்டுமன்று, நம்பிக்கை மையம்; காரணம் ______.
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ அனைத்தும்

6. ஆராய்ந்து சொல்கிறவர் ______.
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர் ஈ) உறவினர்

7. அதிசய மலரின் புன்னகையை உணர்த்துவது ______.
அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com


8. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.
அ) வினைத்தொகை. ஆ) உரிச்சொல் தொடர்.
இ) இடைச்சொடல் தொடர். ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
9. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி, வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறி, கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
10. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.
11. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்புறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ______ பயின்று வந்துள்ளது.
அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
12. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.
அ) காதை – 1. கந்தபுராணம்
ஆ) சருக்கம் – 2. சீவகசிந்தாமணி
இ) இலம்பகம் – 3. சூளாமணி
ஈ) படலம் – 4. சிலப்பதிகாரம்
அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 4 3 1 2
13. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும், பயன்படும் இலக்கிய உத்தி எது?
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்
14. 'உரிமைத்தாகம்' என்ற சிறுகதையின் ஆசிரியர் ______.
அ) புதுமைப்பித்தன் ஆ) பூமணி இ) உத்தமசோழன் ஈ) சுஜாதா

## பகுதி – II

### பிரிவு – 1

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. $3 \times 2 = 6$

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?
16. வசனம், கவிதை வேறுபாடு தருக.
17. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
18. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

### பிரிவு – 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 2 = 4$

19. உலக நாடுகள் ஒன்றிணைந்து புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த, எத்தகைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன?
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. பருவத்தே பயிர்செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு – 3

குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக. $7 \times 2 = 14$

22. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்கள் எழுதுக.
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கை யின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

24. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

26. பாவிகம் – விளக்குக.

27. எவையேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) பொலிந்தான் ஆ) அறிந்து

28. எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சிவிதி தருக.

அ) இனநிரை ஆ) தலைக்கோல்

29. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆற அமர ஆ) வழிவழியாக

30 விடைக்கேற்ற வினா அமைத்தல்.

அ) 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

ஆ) "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப் படுத்துவதே, ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.

## பகுதி – III

### பிரிவு – 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34. "யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே" – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### பிரிவு – 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

36. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு – 3

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. $3 \times 4 = 12$

39. அ) கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(அல்லது)

ஆ) "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. – இதில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

40. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொறுத்தி எழுதுக.

அ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

(அல்லது)

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

41. செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - rooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

43. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எதுகை, மோனை, இயைபு, அணி, சுவை இவற்றில் ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்றினை மட்டும் சுட்டுக.)

வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

## பகுதி – IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. $3 \times 6 = 18$

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப் படுகிறது – எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி – V

47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. $4 + 2 = 6$

அ) "துன்பு உளது..." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "தலை" என முடியும் குறட்பாவை எழுதுக.

# மாதிரி வினாத்தாள் – 2

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 × 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ______.

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் ______.

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பக்தவத்சல பாரதி
ஈ) தமிழர் குடும்பமுறை – 4. சாகித்திய அகாதெமி

அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

4. ‘குழிமாற்று’, எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்.

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

5. ‘உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்’ – இத்தொடர் உணர்த்தும் பண்பு ______.

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

6. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

7. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி ______.

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

8. தமிழில் திணைப்பாகுபாடு, ______அடிப்படையில் பகுக்கப் பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

9. படிமம் என்பதன் பொருள் ______.

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி


Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


10. பொருத்துக.

அ. மாச்சீர் – 1. கருவிளம், கூவிளம்

ஆ. காய்ச்சீர் – 2. நாள், மலர்

இ. விளச்சீர் – 3. தேமாங்காய், புளிமாங்காய்

ஈ. ஓரசைச்சீர் – 4. தேமா, புளிமா

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

11. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப்பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

12. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ

ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு

ஈ) இந்தா போறான் தருமன்

13. Debit Card – என்பதன் கலைச்சொல் தருக.

அ) கடன் அட்டை ஆ) பற்று அட்டை இ) தேய்பு அட்டை ஈ) வரவு அட்டை

14. 'கோடைமழை' சிறுகதையின் ஆசிரியர் ______.

அ) பாலச்சந்திரன் சுள்ளிக்காடு ஆ) சாந்தா தத்

இ) உத்தம சோழன் ஈ) பூமணி

## பகுதி – II

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

16. நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?

17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு வரைக.

18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை ?

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. 'நடை அழகியல்' பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. ''தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com
www.Padasalai.Net

23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) உயர்ந்தோர் – உயர் + த் (ந்) + த் + (ஆர்) ஓர்

ஆ) சாற்றி – சாற்று + இ

24. இலக்கணக்குறிப்புத் தருக.

அ) மாதவம் ஆ) காய்நெல்

25. ஒரு விகற்பம் பல விகற்பம் என்றால் என்ன?

26. தொன்மம் – விளக்கம் தருக.

27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) தலை, தளை, தழை ஆ) விலை, விளை, விழை

28. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

குதிரை, வேகம், ஒடு, தாவு

29. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) மானம் பார்த்த பூமியில், பயிறு வகைகள் பயிரிடப் படுகின்றன.

ஆ) அரங்கன், வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

30. பத்தியைப் படித்துத் தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

## பகுதி – III

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. 'வாயிலோயே' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

33. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை ?

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயல்களையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். –விளக்குக.

36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. அ) நிரல் நிறை அணியை விளக்கிச் சான்று தருக.

(அல்லது)

ஆ) "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.

www.Padasalai.Net

41. கவிதை புனைக.

இயற்கை (அல்லது) பள்ளிக்கூடம்

42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எதுகை, மோனை, இயைபு, அணி, சுவை இவற்றில் ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்றினை மட்டும் சுட்டுக.)

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்!
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்!
இரவில் விண்மீன் காசினைச் – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

– நா. காமராசன்

43. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடி.
(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

அ) ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். ______

ஆ) தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தருவன. ______

இ) சிறுகதை ஆசிரியர் : முதல்பாதி நவீனம். ______

ஈ) முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். ______

உ) தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். ______

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** $3 \times 6 = 18$

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கோடைமழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி – V

47. **அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** $4 + 2 = 6$

அ) "விண்வேறு" எனத் தொடங்கும் சுரதாவின் பாடல்.

ஆ) "அறிவு" என முடியும் குறள்.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 3

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. $14 \times 1 = 14$

1. 'நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது' என்று, அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது ______.

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் – 1. பரலி. சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப் பூ – 2. தி. சு. நடராசன்
இ) கிடை – 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – 4. கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3. கடலின் பெரியது ______.

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) தினைத்துணை நன்றி

4. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" இத்தொடரில், 'கலன்' உணர்த்தும் பொருள் ______.

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

5. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணமும் சரி

6. ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈராறு ஆண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல்.... – தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1) மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.
2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

7. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும், அவரைப் பாடியவரும் ______

அ) சோழன் நெடுங்கிள்ளையை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

8. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது ______.

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

9. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

10. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | பாலை பாடினான் | 1 | தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| ஆ) | பாலைப் பாடினான் | 2 | தேரினைப் பார்த்தான் |
| இ) | தேரை பார்த்தான் | 3 | பாலினைப் பாடினான் |
| ஈ) | தேரைப் பார்த்தான் | 4 | பாலைத் திணை பாடினான் |

அ) 4 1 3 2 ஆ) 2 3 1 4 இ) 4 3 1 2 ஈ) 2 4 1 3

11. மெய்ப்பபடிமத்திற்குரிய பாடலைத் தேர்வு செய்க.
அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு
ஆ) காட்டில் நிணக்கும் இழிசினன் கையது
இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்
ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப

12. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர், ______.
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

13. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள் ______.
அ) உவமை ஆ) உவமேயம்
இ) உத்தி ஈ) உள்ளுறை உவ(மம்)மை

14. ‘முதல்கல்’ சிறுகதையின் ஆசிரியர் ______.
அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன் இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா

## பகுதி – II

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
16. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்’ – யார்க்கு?
17. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர் ?

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் ? சான்று தருக.
21. ‘விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்’ – யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. உவமைத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) கிணற்றுத் தவளைபோல ஆ) எலியும் பூனையும்போல

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com


23. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள்களை அறிந்து தொடர் அமைக்கவும்.
24. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) விம்முகின்ற ஆ) சாய்ப்பான்
25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
அ) வெங்கதிர் ஆ) வானமெல்லாம்
26. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
அ) தாமரை ஆ) வெங்காயம்
28. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க
அ) களம், கலம் ஆ) ஊண் – ஊன்
29. கலைச்சொல்லுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.
அ) Internet Banking ஆ) Tips
30. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
ஆ) ஆட்டுத்தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

## பகுதி – III

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
32. "மூன்றான காலம்போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக.
33. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார் ?
34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.
37. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. அ) "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்" – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.
(அல்லது)
ஆ) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.
40. பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எதுகை, மோனை, இயைபு, அணி, சுவை இவற்றில் ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்றினை மட்டும் சுட்டுக.)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

42. கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க.

வேப்பமரத்தாலான மரப்பாச்சிப் பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும், அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஒசை கேட்கும்....

43. தமிழாக்கம் தருக.

அ) A new language is new life.

ஆ) Knowledge of languages is the doorway to wisdom.

இ) The limits of my language are the limits of my world.

ஈ) If you want people to understand you, speak their language.

## பகுதி – IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. $3 \times 6 = 18$

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... – கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ளப் புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

## பகுதி – V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. $4 + 2 = 6$

அ) "குழல்வழி...." எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

ஆ) "மகற்கு" என முடியும் குறள்.

ஐஐஐஐஐஐஐ

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

**தேர்வு தொடங்கும் நாள் : 03.03.2025**

**தேர்வு முடியும் நாள் : 25.03.2025**

| | | |
|---|---|---|
| **பள்ளிகள்** | – | **7,518** |
| மாணவர்கள் | – | 3,78,545 |
| மாணவிகள் | – | 4,24,023 |
| தனித்தேர்வர்கள் | – | 18,344 |
| சிறைவாசிகள் | – | 145 |
| **மொத்தம்** | – | **8,21,057** |
| தேர்வு மையங்கள் | – | 3,316 |
| பொதுத்தேர்வு முடிவு | – | மே, 9 |

**பொதுத்தேர்வு எழுத இருக்கின்ற மாணவ, மாணவியர் அனைவரும் உயர் மதிப்பெண்கள் பெற்று, வெற்றிவாகை சூட**

**கவிமணி இன்பத்தமிழ் வாழ்த்துகிறது.**

www.Padasalai.Net